RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 178 | ஜூலை.3 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம்: கடலூர், தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்தில் மாற்றம்

சென்னை: ஜூலை.3-

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற தொடர் பிரச்சார சுற்றுப் பயணத்தை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதியில் வரும் ஜூலை 7ம் தேதி தொடங்குகிறார். ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த கடலூர் மற்றும் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயண விவரங்களில், சில தேதிகளும் இடங்களும் மாற்றப்பட்டுள்ளது.



இது தொடர்பாக அதிமுக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இந்த சுற்றுப் பயணத்தை 7ம் தேதி கோவை மேட்டுப்பாளையம் தொகுதியில் தொடங்குகிறார். பின்னர், கவுண்டம்பாளையம் தொகுதிக்கு செல்கிறார். 8ம் தேதி கோவை வடக்கு மற்றும் தெற்கு தொகுதிகள், 10ம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம், விக்கிரவாண்டி, திண்டிவனம் தொகுதிகள், 11ம் தேதி வானூர், மயிலம், செஞ்சி தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

12ம் தேதி கடலூர் மாவட்டம் கடலூர், பண்ருட்டி, நெய்வேலி தொகுதிகள், 14ம் தேதி குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய தொகுதிகள், 15ம் தேதி பெரம்பலூர் மாவட்டத்தில் குன்னம், அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய தொகுதிகள், 16ம் தேதி கடலூர் மாவட்டம் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோவில் ஆகிய தொகுதிகள், 17ம் தேதி மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

18ம் தேதி திருவாரூர் மாவட்டம் நன்னிலம், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர், 19ம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் செய்கிறார். 21ம் தேதி மன்னார்குடி, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், கும்பகோணம் ஆகிய தொகுதிகள், 22ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம், தஞ்சாவூர், திருவையாறு ஆகிய தொகுதிகள், 23ம் தேதி, ஒரத்தநாடு, பேராவூரணி, பட்டுக்கோட்டை, ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்' என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## "இந்த 23 பேரின் பெற்றோரிடம் ஸ்டாலின் மன்னிப்பு கேட்பது எப்போது?" நயினார் நாகேந்திரன்

சென்னை: ஜூலை.3-

"காவலர்களால் கொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் தாயிடம் ஒரே வரியில் 'சாரி' எனச் சொல்வது எந்த வகையில் நியாயம்?" என்று முதல்வர் ஸ்டாலினுக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள பதிவில், "காவலர்களால் படுகொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் தாயிடம் "சாரி மா" என்று சொல்லும் நேர்த்தியாக வெட்டி ஒட்டப்பட்ட காணொளியை செய்திகளில் பார்த்தேன். ஓர் அப்பாவி இளைஞனைத் துள்ளத் துடிக்கக் கொன்றுவிட்டு, ஒரே வரியில் "சாரி" என்று சொல்வது எந்த வகையில் நியாயமாகும்?

இதுபோன்ற மரணங்கள் நிகழாமல் தடுப்பது தானே காவல் துறையை தன் நேரடி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு முதல்வரின் கடமை? சரி, ஒருவேளை மனம் உவந்து தான் முதல்வர் மன்னிப்பு கேட்கிறார் என்றால், இதோ முதல்வர் ஸ்டாலினின் ஆட்சியில் காவல் நிலையங்களிலும், காவல் துறை பாதுகாப்பில் இருந்தபோது சந்தேகத்துக்குரிய வகையிலும் இறந்தவர்களின் பட்டியல்:

பிரபாகரன் (45) நாமக்கல்
சுலைமான் ( 44) திருநெல்வேலி
தாடிவீரன் (38) திருநெல்வேலி
விக்னேஷ் (25) சென்னை
தங்கமணி (48) திருவண்ணாமலை
அப்பு (எ) ராஜசேகர் (31) சென்னை
சின்னதுரை (53) புதுக்கோட்டை
தங்கபாண்டி (33) விருதுநகர்
முருகானந்தம் (38) அரியலூர்
ஆகாஷ் (21) சென்னை
கோகுல்ஸ்ரீ (17) செங்கல்பட்டு
தங்கசாமி (26) தென்காசி
கார்த்தி (30) மதுரை
ராஜா (42) விழுப்புரம்
சாந்தகுமார் (35) திருவள்ளூர்
ஜெயகுமார் (60) விருதுநகர்
அர்புதராஜ் (31) விழுப்புரம்
பாஸ்கர் (39) கடலூர்
பாலகுமார் (26) ராமநாதபுரம்
திராவிடமணி (40) திருச்சி
விக்னேஷ்வரன் (36) புதுக்கோட்டை
சங்கர் (36) கரூர்
செந்தில் (28) தருமபுரி

இவர்கள் உள்ளிட்ட 23 பேரின் பெற்றோரிடமும், மனைவி மக்களிடமும் முதல்வர் ஸ்டாலின் மன்னிப்பு கேட்கும் புகைப்படம் வீடியோ ஷூட் எப்போது நடக்கும்?" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# திமுக கூட்டணிக்கு மேலும் சில கட்சிகள் வர வாய்ப்புள்ளது: முதல்வர் ஸ்டாலின் தகவல்



சென்னை: ஜூலை.3-

திமுக கூட்டணிக்கு வேறு கட்சிகளும் வர வாய்ப்புள்ளதாகவும் வந்தால் கலந்து பேசி முடிவு செய்வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் வாக்குச்சாவடி தோறும் 30 சதவீதம் பேரை திமுகவில் உறுப்பினராக சேர்க்கும் 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகம் முழுவதும் ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகிறது. ஜூலை 3 முதல் (நாளை) தமிழ்நாடு முழுவதும் வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்திக்க இருக்கிறோம்.

தமிழகத்தின் மண், மொழி, மானம் காக்க, மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டுவதுதான் இதன் அடிப்படை நோக்கமாகும். தமிழகத்துக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தமிழக மக்கள் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்பதற்கான முயற்சி தான் இது.

அனைத்திலும் வளர்ந்த தமிழகத்தை, மத்திய அரசு பல்வேறு வழிகளில் புறக்கணிக்கிறது. இதனை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழக மக்களும் எதிர்க்க வேண்டும். அதற்காகத்தான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் அனைத்து வீடுகளுக்கும் சென்று, மக்கள் அனைவரையும் சந்திக்கப் போகிறோம்.

அப்போது, திமுகவில் இணைய விரும்புவோர் செயலி மற்றும் படிவம் மூலமும் தங்களை இணைத்துக் கொள்ளலாம். மேலோட்டமாக பார்த்தால், திமுக உறுப்பினர் சேர்க்கையாக தெரிந்தாலும், உண்மையான நோக்கம் கட்சி எல்லைகளைத் தாண்டி தமிழகத்தின் நலனுக்கானது.

தமிழகம் ஒன்றுபட்டு நிற்கும்போது, எந்த சக்தியாலும் நம்மை வீழ்த்த முடியாது என காட்டியாக வேண்டும். பாஜகவின் அரசியல், பண்பாட்டு படையெடுப்பை, தமிழகம் மீதான பொருளாதாரப் போரை எதிர்கொள்ள நெஞ்சுரம் உள்ள அரசியல் சக்தி தேவை. அதை உருவாக்கத்தான் 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரையை இயக்கமாகத் தொடங்கி இருக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். தொடர்ந்து செய்தியாளர்கள் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார்.

திருபுவனம் விஷயத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தால் பிரச்சினையில்லாம் இருந்திருக்கும். அதிகாரிகள் தவறு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை? என்ன தவறு செய்தார்கள், தகவல் தெரிந்தவுடன் நடவடிக்கை எடுத்துவிட்டோம். கைது செய்துவிட்டோம். இன்றைக்குக்கூட மேலதிகாரி மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

உறுப்பினர் சேர்ப்பில் பழனிசாமி வீட்டுக்கும் சென்று வலியுறுத்துவீர்களா? நிச்சயமாக சென்று விருப்பம் உள்ளவர்களைச் சேர்க்கப் போகிறோம். கட்டாயப்படுத்திச் சேர்க்கப் போவதில்லை. ஒவ்வொருவரிடமும் பொறுப்பு ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் சூழ்நிலைக்கேற்றவாறு செல்வார்கள். நான் அந்தப் பகுதியில் இருந்தால் பழனிசாமி வீட்டுக்கு நிச்சயம் செல்வேன்.

கூட்டணிக் கட்சிகள் கூடுதல் இடங்களை கேட்கத் தொடங்கியுள்ளார்களே? தேர்தல் தேதி அறிவித்த பிறகு நாங்கள் உட்கார்ந்து பேசுவோம். அதைச் சமாளித்துவிடுவோம்.

இந்தக் கூட்டணியில் இன்னும் கூடுதல் கட்சிகள் சேர வாய்ப்பிருக்கிறதா? வருவதற்கான வாய்ப்பிருக்கிறது. அதை எப்படி சேர்ப்போம் என்று கலந்துபேசி முடிவு செய்வோம். 200 தொகுதிகளில் வெல்வோம் என்று சொல்லியிருக்கிறோம். அதைத் தாண்டிதான் வரும் என்று நினைக்கிறேன்.

தமிழகத்துக்கு தொடர்ந்து வருவேன் என மத்திய அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளாரே? பிரதமரும், அமித் ஷாவும் அடிக்கடி வரவேண்டும். அவர்கள் பேசுவது பொய் என்று மக்களுக்குத் தெரிகிறது. அது எங்களது தேர்தல் நேரத்தில் லாபமாக அமையும். அதே போன்று, ஆளுநரும் கெடுதல் செய்து கொண்டிருக்கிறார். அதனால் அவர்களெல்லாம் அடிக்கடி வர வேண்டும். அது தான் என்னுடைய ஆசை. இவ்வாறு அவர் பதிலளித்தார்.

## மத நம்பிக்கையில் தலையிட முடியாது: கண்டதேவி தேரோட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் கருத்து

மதுரை: ஜூலை.3-

ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பழக்க வழக்கம், மத நம்பிக்கை உள்ளது. இதில் உடனடியாக நீதிமன்றம் தலையிட்டு எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என கண்டதேவி கோயில் தேரோட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.



சிவகங்கை மாவட்டம் கண்டதேவியைச் சேர்ந்த கேசவமணி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "கண்டதேவி ஸ்ரீ சொர்ண மூர்த்தீஸ்வரர் திருக்கோயில் சிவகங்கை தேவஸ்தானம் மற்றும் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இந்தக்கோயிலில் யாருக்கும் முதல் மரியாதை வழங்கக்கூடாது என்றும், அனைத்து சமூக மக்களையும் இணைந்து அவர்கள் பங்களிப்புடன் திருவிழா நடத்த வேண்டும் என 2014ல் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு கண்டதேவி தேரோட்டத்தின் போது அனைத்து சமூக மக்களும் தேரின் வடத்தை பிடித்து இழுக்க டோக்கன் வழங்கப்பட்டது. இருப்பினும் முதல் மரியாதை பெறும் நோக்கத்தில் சிலர் அவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களை அதிகளவில் அழைத்துச் சென்று தேரின் வடத்தை பிடித்ததால் பிற சமூக மக்கள் தேரின் வடத்தை பிடித்து இழுக்க முடியாத சூழல் ஏற்பட்டு சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவானது.

இந்த ஆண்டு ஜூலை 8ல் கண்டதேவி தேரோட்டம் நடைபெறுகிறது. அப்போது பட்டியல் சமூகத்தினர் தேரின் வடத்தை பிடித்து இழுப்பதற்கு வசதியாக யாருக்கும் முதல் மரியாதை வழங்கக்கூடாது என அதிகாரிகளிடம் மனு அளித்தோம். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே கண்டதேவி கோயில் தேரோட்டத்தில் யாருக்கும் முதல் மரியாதை வழங்கக்கூடாது என உத்தரவிட வேண்டும்," என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், மரிய கிளாட் அமர்வில் இன்று (ஜூலை 2) விசாரணைக்கு வந்தது. அப்போது இந்து சமய அறநிலையத்துறை சார்பில், "ஏற்கெனவே உள்ள உத்தரவுப்படி கடந்த ஆண்டு முறைப்படி மரியாதை செலுத்தப்பட்டது. கோயில் தேரோட்டத்தில் எந்த பாகுபாடும் இல்லாமல் பங்கேற்றனர். இந்த ஆண்டும் அதேபோல் தோரோட்டம் நடைபெறும்," என தெரிவிக்கப்பட்டது.

அப்போது மனுதாரர்கள் தரப்பில், "இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான கோயிலில், யாருக்கும் முதல் மரியாதை வழங்கப்படக் கூடாது. தேரோட்டதில் பட்டியலின மக்களை பங்கேற்க விடாமல் தடுக்கின்றனர்." என வாதிடப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "சாதி பாகுபாடு இருந்தால், உரிய அமைப்பிடம் அதிகாரிகளிடம் சென்று முறையிட்டு நிவாரணம் பெறலாம். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு பழக்க வழக்கம் உள்ளது. மத நம்பிக்கை உள்ளது. இதில் உடனடியாக நீதிமன்றம் தலையிட்டு எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது. மேலும், இது குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணையில் இருப்பதால் தற்போது நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது" என கருத்து தெரிவித்து வழக்கை முடித்துவைத்தனர்.

## குறைந்த ரயில் கட்டண உயர்வு என்பது வெறும் கண் துடைப்பு: சு.வெங்கடேசன் எம்.பி. சாடல்

மதுரை, ஜூலை.3-

மதுரை மக்களவைத் தொகுதி மார்க்சிஸ்ட் எம்பி சு. வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை: ரயில்களில் புறநகர் பயணக் கட்டணமும் , சீசன் டிக்கெட் கட்டணமும் உயரவில்லை. ஒரு பயண கிலோ மீட்டருக்கு அரை பைசா, ஒரு பைசா 2 பைசா என கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என அறிவிக்கப் பட்டது. ஆனால், உண்மை நிலவரம் என்ன என்பது புள்ளி விவரங்களைப் பார்த்தால் புரியும்.



2017-2018ல் 824 கோடி பேரும், 2018 2019ல் 846 கோடி பேரும், 2018 2019ல் 846 கோடி பேரும் பயணித்துள்ளனர். கட்டண வருமானம் ரூ.45 ஆயிரம் கோடி கிடைத்துள்ளது. ஆனால், 2024 2025ல் பயணிகள் எண்ணிக்கை 715 கோடியாக குறைந்துள்ளது. அதாவது 130 கோடி பயணிகள் குறைந்து விட்டனர். ஆனால் வருமானம் ரூ. 45,000 கோடியில் இருந்து ரூ.75,000 கோடியாக உயர்ந்துள்ளது. இதன் ரகசியம் என்ன?

முன்பதிவு 68 கோடியில் இருந்து 81 கோடியாக அதிகரித்துள்ளது. ஆனால் முன்பதிவு இல்லா பயணிகளின் எண்ணிக்கை 778 கோடியில் இருந்து 634 கோடியாக குறைந்துள்ளது. இந்த வருமானம் எப்படி அதிகரித்தது. தட்கல், பிரீமியம் தட்கல், டைனமிக் கட்டணம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு பெட்டியிலும் 30 சதவீதமான படுக்கை வசதிகள் ஒதுக்கப்படுகின்றன. இவை ரூ. 500க்குப் பதிலாக ரூ.3000 க்கு விற்கப்படுகிறது. வந்தே பாரத், சதாப்தி, அந்தியோதயா என்ற வகைகளில் கட்டண உயர்வு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

முன்பதிவு இல்லா பெட்டிகளைக் குறைத்தல், சாதாரண ரயில்களை ரத்து செய்தல் போன்றவற்றால் பயணிகளின் எண்ணிக்கை குறைந்தாலும் வருவாய் அதிகரித்துள்ளது. மறைமுகக் கட்டண உயர்வு மூலம் பயணிகளை சாலைக்கு துரத்துவது என்பது தேச நலனுக்கு விரோதம். கட்டண உயர்வு மூலம் 75 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டும் ரயில்வே, கண் துடைப்புக்காக குறைந்த கட்டண உயர்வு என்பதை ஏற்க முடியாது. இவ்வாறு கூறியுள்ளார்.



# கே.வி.குப்பம் தாலுகாவில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

வேலூர், ஜுலை.3-

வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் தாலுகா, பி.கே.புரம் கிராமம், வேலூர் மாவட்டத்தில் தேசிய கோமாரி நோய் கட்டுப்படுத்துதல் திட்டத்தின் கீழ் (NAD-CP) கால்நடைகளுக்கான 7ம் சுற்று கால் மற்றும் வாய் நோய் (கோமாரி நோய்) தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கால்நடைத்துறை இணை இயக்குநர் மரு. எஸ்.திருக்குமரன், உதவி இயக்குநர் மரு.அந்துவன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, விவசாயிகள், அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# கட்டிட பணிகள் நிறைவுபெராமலேயே ஜூடியோ துணிக்கடை கண்ணாடி மாளிகை திறந்த அவலநிலை

## மாவட்ட அரசு கையூட்டு பெற்றுக் கொண்டு கட்டிட சட்ட விதிமுறைகளை மீறும் உயர்பதவி ஊழியர்கள்

வேலூர், ஜுலை.3-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி மிலினியம் பிளாசா எதிரே உள்ள சர்வீஸ் சாலையில், கட்டிட பணிகள் நிறைவுபெராமலேயே ஜூடியோ துணிக்கடை கண்ணாடி மாளிகை திறந்துள்ள அவலநிலை, துணி வாங்க வரும் வாடிக்கையாளர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லை வாடிக்கையாளர்கள் மீது சாரங்கள் மற்றும் கட்டிட பொருட்கள் கீழே விழுந்தால் உயிர் சேதம் ஏற்படும் அபாயமும் உள்ளது. இதனை, மற்றும் இல்லாத, மாவட்டம் முழுதும் பல்வேறு இடங்களில் இதே போன்ற அவல நிலைகள் தலைவிரித்தாடி வருகிறது. இதனை கேட்கும் பட்சத்தில் நாங்கள் அனைவருக்கும் கப்பம் கட்டி வருகிறோம் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என கூறுகின்றனர். மாவட்ட அரசு கையூட்டு பெற்றுக் கொண்டு கட்டிட சட்ட விதிமுறைகளை மீறி திறக்க அனுமதிக்கப்பட்ட அவலநிலை, இதனை எந்த அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்...? யார் ஒப்புதல் கொடுத்தது..? சட்ட விதிமுறைகளை மீறும் உயர் பதவி ஊழியர்கள் மீது தக்க சட்ட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மா தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.



# அரசுப்பள்ளி கீழக்கோட்டையில் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் வாட்டர் பெல் திட்டம்

காளையார் கோவில் ஜுலை.3-

தமிழ்நாடு அரசின் வாட்டர் பெல் திட்டம் அரசு பள்ளிகள் அரசு உதவி பெறும் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தினமும் மூன்று வேளை மணி ஒலிக்கும். அந்த நேரத்தில் மாணவ மாணவிகள் தண்ணீர் அருந்த வேண்டும். இது குறித்து தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி கூறியதாவது. அனைத்து மாணவ மாணவிகளும் தங்கள் வீட்டில் இருந்து தண்ணீர் பாட்டில் அல்லது தண்ணீர் இல்லாமல் தண்ணீர் பாட்டில் கொண்டு வர வேண்டும். காய்ச்சி வடிகட்டிய சுத்தமான தண்ணீரை குழந்தைகள் அருந்தும்போது தண்ணீர் வாயிலாக ஏற்படும் தொற்று நோய்களின் பாதிப்புகள் குறையும். மாணவர்களின் உடல்நலம் காக்க நீர்ச்சத்து குறைபாட்டை போக்க வெயில் காலத்தில் தலைவலி சிறுநீர் தொற்று ஏற்படாமல் காக்க நீர் அருந்தாததால் குழந்தைகளுக்கு கற்றல் திறன் பாதிக்கப்படாமல் இருக்க பள்ளிகளுக்கு மாணவர்கள் தண்ணீர் பாட்டிலை கட்டாயம் கொண்டு வரவேண்டும். காலை 11 மணி மதியம் 1 மணி மாலை 3 மணிக்கு குழந்தைகள் தண்ணீர் அருந்துவதற்கு மணி அடிக்கப்படும். தண்ணீர் அருந்த இரண்டு முதல் மூன்று நிமிடங்கள் அளிக்கப்படும். இதற்காக வகுப்புகளுக்கு வெளியே மாணவர்கள் செல்லக்கூடாது. வகுப்பு சூழல்களுக்கு இடையூறு நேரதவாறு உள்ளேயே தண்ணீரை அருந்த வேண்டும். தமிழ்நாடு அரசின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் காலை உணவுத் திட்டம் மதிய உணவு திட்டம் போல வாட்டர் பெல் திட்டமும் குழந்தைகளுக்கு மிகுந்த பயனளிக்கும். தூயநீர் உலகின் முதல் மற்றும் முன்னனி மருத்துவம் ஆகும் என்று ஸ்லோவாக் பழமொழி கூறுகிறது என்றார். பள்ளியில் மாணவ மாணவிகள் தண்ணீர் குடிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் தலைமை ஆசிரியை தெய்வானை குழந்தைகளுக்கு பயனளிக்கும் வாட்டர் பெல் திட்டத்தை பெல் அடித்து தொடங்கி வைத்தார். மாணவர் மாணவிகள் உற்சாகத்துடன் தண்ணீர் அருந்தினார்கள். பள்ளியில் இத்திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த ஆசிரியைகள் மீனாட்சி கமலம்பாய் வாசுகி வித்யா உறுதியேற்றுக்கொண்டனர்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருப்புவனம் மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் சகோதரருக்கு பணி நியமன ஆணையினை நேரில் சென்று வழங்கினார்



திருப்புவனம் ஜுலை.3-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம், நேற்று முன்தினம் (01.07.2025) அலைபேசியின் வாயிலாக முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று (2.7.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில், பணி நியமன ஆணையினை மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமார் (வயது 27) சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், காரைக்குடி டெக்னீசியன் பணியிடத்திற்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

மேலும், தேளி வருவாய் கிராமத்திற்குட்பட்ட புல எண். 4011ன் படி 0.01.20 ஏர்ஸ் (3சென்ட்) பரப்பளவில், அஜித்குமார் தாயார் மாலதிக்கு வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், திருப்புவனம் வட்டாட்சியர் விஜயகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.



# வேலூர், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் புகைப்பட கண்காட்சி

வேலூர், ஜுலை.3-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, இறைவன்காடு கிராமத்தில் வேலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மத்திய மாநில அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.




■ நீலகிரி மாவட்டம். மேட்டுப்பாளையத்தில் இருந்து, ஊட்டிக்கு செல்லும் வழியில் பர்லியார், என்ற இடத்தில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது .இந்த மண் சரிவை சரி செய்ய பொக்லின் இயந்திரம் கொண்டு சரிந்த மணல் குன்றுகளை நெடுஞ் சாலைத்துறையினர் மணல்களை அகற்றிக் கொண்டு இருந்தனர். மேற்கொண்டு மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டி செல்லும் வழியில் முன்னதாக உள்ளது பர்லியார் இடத்தில் தான் இந்த சம்பவம் நடந்தது. மேற்கொண்டு போக்குவரத்துக்கு எந்த இடையூறும் இல்லாமல் வாகனங்கள் அனைத்தும் வழக்கம்போல் செயல்பட்டது.



# சென்னையில் தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறை சார்பில் 45 இணையருக்கு திருமணம் நடைபெற்றது

சென்னை, ஜுலை.3-

மாவட்ட அறங்காவலர், பொதுக்குழு உறுப்பினர் ஏஆர். ஜெயமூர்த்தி, அறங்காவலர் தலைவர் வி. சி. கண்ணப்பன் உதவி ஆணையர்கள் கவிதா, ஞானசேகரன் பங்கேற்பு தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறையின்கீழ் தமிழகமெங்கும் இலவச திருமணங்களை தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பிகே. சேகர்பாபு ஆகியோரால் சென்னையில் நடத்தி வைக்கப்பட்டது தமிழகமெங்கும் அறநிலையத்துறை கோவில்களில் இலவச திருமணங்கள் நடைபெற்றது.அதனடிப்படையில் சிவகங்கை மண்டல இணை ஆணையர் பா. பாரதி அவர்களின் ஆலோசனையின்பேரில் இன்று கொல்லங்குடி பகுதிகளில் இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது அந்த வகையில் கொல்லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் ஆலயத்தில் திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் , மாவட்ட அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி , கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் அறங்காவலர்குழுத்தலைவர் , காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக துணைச்செயலாளர் கண்டிப்பட்டி வி. சி. கண்ணப்பன், ஆகியோரது தலைமையிலும், அறநிலையத்துறை உதவி ஆணையர்கள் கவிதா , ஞானசேகரன், மேலாளர் முருகானந்தம், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் கண. சந்திரன், ராணி சீனிவாசன், ஆய்வாளர்கள் பிச்சைமணி , காரைக்குடி முத்துமுருகன் , சுகன்யா, இசக்கி , தமிழரசி , செயல் அலுவலர் மாரிமுத்து, அய்யனார் ஆகியோர் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் நாட்டரசன்கோட்டை பேரூர்க்கழக திமுக செயலாளர் ஜெயராமன், காளையார்கோவில் தெற்கு ஒன்றியக்கழக துணைச் செயலாளர் தொழிலதிபர் கோலாந்தி கோதண்டபாணி, காளையார்கோவில் கிளைக்கழக செயலாளர் ஆர். வி. எஸ். அரங்கநாதன், ஒன்றிய மேனாள் கவுன்சிலர், அரசு ஒப்பந்ததார், ஆர். எம். எல். கருணாநிதி, அறங்காவலர் மாணவரணி கார்த்தி , வர்த்தக அணி பாலமுருகன் , கிளைக்கழக செயலாளர்கள் தனிஸ்லஸ் , முத்துக்கண்ணன் ,தச்சனேந்தல் அக்னிச்சாமி, கே. முத்தையா , காளைமணி, தினேஷ், இராஜராஜன் , வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருண்குமார், மாவட்டம் அழகர்சாமி உள்ளிட்ட ஏராள மானோர் திருமணத்திற்கு கலந்து கொண்டனர்.. திருமணமான தம்பதியினருக்கு நான்கு கிராம் பொன் தாலி, உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது.

# பட்டணம் காத்தான் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டம் ஏழாவது சுற்று தடுப்பூசி முகாம்

இராமநாதபுரம், ஜுலை.3-

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பட்டணம் காத்தான் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டம் ஏழாவது சுற்று தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமை துவக்கி வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கோமாரி நோய் தடுப்பூசிக்கான ஏழாவது சுற்று முகாம் 02.07.2025 முதல் 31.07.2025 வரை நடைபெறுகின்றன. இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள சுமார் 72 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் காலை 7:00 மணி முதல் 10.00 மணி வரை மற்றும் மாலை 4.00 மணி முதல் 6:00 மணி வரை கால்நடைகளுக்கான தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெறும். கால்நடை வளர்ப்போர் தவறாமல் தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசியினை போட்டு பாதுகாப்புடன் பராமரிக்க வேண்டும். கால் மற்றும் வாய்க்காணை நோயானது நாட்டின மாடுகள், அயல் இன மாடுகள் மற்றும் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதுடன் பால் உற்பத்தி இழப்பையும் ஏற்படுத்துகிறது. அதைபோல் எருதுகளுக்கு இந்நோய் தாக்குவதனால் அதன் வேலை திறன் குறைவு ஏற்படும். இளம் கன்றுகள் இந்நோய் தாக்குதலால் இறப்பு ஏற்படும் நிலையும் ஏற்படும்.



எனவே கால்நடைகளை தாக்கும் கால் மற்றும் வாய்க்காணை நோயினை கட்டுப்படுத்த தடுப்பூசி முகாமில் கட்டாயம் கால்நடைகளை அழைத்துச் சென்று மாவட்டத்தில் ஒரு கால்நடை கூட விடுபடாத அளவிற்கு அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி செலுத்தி கால்நடைகளை நல்ல முறையில் பராமரித்து பொருளாதார இழப்பை தவிர்த்து சிறந்த முறையில் பயன்பெற்றிட வேண்டும் என செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை தீவனங்கள் மற்றும் சத்துமாவு பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இம்முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.ரவிச்சந்திரன் அவர்கள், உதவி இயக்குநர்கள் மரு.அரசு அவர்கள், மரு.சுந்தரமூர்த்தி அவர்கள், மரு.ராஜா அவர்கள், கால்நடை மருத்துவ அலுவலர்கள் மரு.சித்திமர்ஜிதா அவர்கள், மரு.முருகராஜன் அவர்கள், மரு.நந்திதா அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட கலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கானக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரோ தகவல்

திருப்பூர், ஜூலை.3-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தாய்த் தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா சூட்டிய ஜூலை 18 ஆம் நாள்"தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பெற்றுள்ளது. இவ்வறிவிப்பின்படி, தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பெற்று வருகின்றன.

அதனடிப்படையில், 2025ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் மாவட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு 10072025 வியாழக்கிழமை அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கட்டுரை, பேச்சு போட்டிகள் நடைபெற உள்ளன. அப்போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசு ரூ.10,000/, இரண்டாம் பரிசு ரூ.7,000/ , மற்றும் மூன்றாம் பரிசு ரூ. 5,000/ என்ற வகையில் வழங்கப்பெற உள்ளன.

பள்ளித் தலைமையாசிரியர்கள் அவர்தம் பள்ளி மாணவர்களிடையே முதற்கட்டமாக கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் கீழ்நிலையில் நடத்தி மாணவர்களைத் தெரிவுசெய்து மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக பின்வரும் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம், அறை எண்.608, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் என்ற முகவரியில் நேரில் / அஞ்சலில் அல்லது ddtamil607@gmail.com என்ற மின்னஞ்சலில் 07.07.2025ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்கவேண்டும். மாவட்ட அளவிலான போட்டிகளின் தலைப்புகள் பின்வருமாறு:

கட்டுரைபேச்சு

1. ஆட்சிமொழி வரலாற்றில் கீ.இராமலிங்கம்
2. பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையாரின் தமிழ் ஆட்சிச் சொல் பணி

1. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
2. அன்னைத் தமிழே ஆட்சிமொழி
3. தொன்றுதொட்டு தமிழ்நாடு எனும் பெயர்
4. அறிஞர் அண்ணா கண்ட தமிழ்நாடு
5. ஆட்சிமொழி விளக்கம்
6. தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய நிகழ்வு
7. ஆட்சிமொழி ஸ்ரீ சங்க காலம் தொட்டு
8. இக்காலத்தில் ஆட்சிமொழி

போட்டிகள் காலை 10.00 மணிக்கு தொடங்கப்பெறும். இப்போட்டிகளில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவ/மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே,அறிவித்துள்ளார்.

# திருப்புவனம் காவல் நிலைய மரண வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றம் : தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பை வழங்கும்

## இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது : தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிக்கை



சிவகங்கை, ஜூலை.3-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில், கடந்த 28.06.2025 அன்று வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட . அஜித்குமார் என்பவர், திருப்புவனம் காவல் நிலையத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். விசாரணையின் போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் அவரது மரணத்துக்குக் காரணம் என்பதை அறிந்ததும் நான் மிகவும் வேதனையடைந்தேன்.

இது யாராலும் நியாயப்படுத்தப்பட முடியாத, காரணம் சொல்லித் தப்பிக்க முடியாத செயல். இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாகச் சம்பவம் நடந்த அன்றே பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைகளின்படி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய தினம் , 5 காவலர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணை சிபிசிஐடி பிரிவுக்கும் மாற்றப்பட்டது.

இன்று சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். துணைக் கண்காணிப்பளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்படி சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுத்துக்கப்பட்டு வருகிறது.

துயர மரணத்தை அடைந்துள்ள அஜித்குமார் அவர்களின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு நான் பேசினேன். நடைபெற்ற துயரச் சம்பவத்திற்கு எனது வருத்தத்தை அவர்களிடம் தெரிவித்தேன்.

நியாயமான, ஒளிவுமறைவற்ற, எவ்வித பாரபட்சமுமற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும், இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, திரு. அஜித்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு நியாயம் கிடைத்திட வழிவகை செய்யப்படும் என்றும் உறுதியளித்துள்ளேன்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, இவ்வழக்கில் சிபிசிஜடி தனது விசாரணையைத் தொடரலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்தச் சம்பவத்தில் காவல் துறையைச் சேர்ந்த ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கின் விசாரணை குறித்து, எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிடுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். சி.பி.ஐ. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும்.

காவல்துறையினர் தங்களது விசாரணையின்போது மனித உரிமையைக் காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். இதுபோன்ற மீறல் சம்பவங்களை நான் எப்போதும் ஏற்றுக்கொள்வது இல்லை.

திருப்புவனத்தில் சில காவலர்கள் செய்த செயல், மன்னிக்க முடியாதது. இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது என்பதை எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன்.

தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திடும் என நம்பி காவல்துறையை நாடி வரும் பொதுமக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிடும் வகையில் காவல்துறை எப்போதும் செயல்பட வேண்டும்.



■ வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் தாலுகா, பி.கே.புரம் கிராமம், வேலூர் மாவட்டத்தில் தேசிய கோமாரி நோய் கட்டுப்படுத்துதல் திட்டத்தின் கீழ் (NADCP) கால்நடைகளுக்கான 7ம் சுற்று கால் மற்றும் வாய் நோய் (கோமாரி நோய்) தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கால்நடைத்துறை இணை இயக்குநர் மரு. எஸ்.திருக்குமரன், உதவி இயக்குநர் மரு.அந்துவன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, விவசாயிகள், அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் (DISHA) மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் பா.மாணிக்கம் தாகூர் , தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்தமிழ் செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் இ.ஆ.ப., , மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் , மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் இ.ஆ.ப., , சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), பி.அய்யப்பன் (உசிலம்பட்டி) , மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.





# கொடைக்கானல், மேல்பள்ளம் அருகே 100 வருட பழமையான அருள்மிகு ஸ்ரீ பட்டிவேலப்பர் (முருகன்) கோவில் கும்பாபிஷேகம்

கொடைக்கானல், ஜூலை.3-

கொடைக்கானல், மேல்பள்ளம் அருகே 100 வருட பழமையான அருள் மிகு ஸ்ரீ பட்டிவேலப்பர் (முருகன்) கோவில் கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது...

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வடகவுஞ்சி ஊராட்சிக்குட்பட்ட மேல்பள்ளம் என்ற பகுதியில் சுமார் 300 வருட பழமையான அருள் மிகு ஸ்ரீ பட்டிவேலப்பர் (முருகன்) கோவிலின் மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெற்றது.

குறிப்பாக கடந்த 12 வருடங்களுக்கு பிறகு இந்த கோவிலில் இரண்டாவது முறையாக மஹா கும்பாபிஷேகம் நிகழ்வானது இன்று நடைபெற்றது,

கடந்த 2 நாட்களாக 4 யாக கால பூஜைகள் நடத்தப்பட்டு, பட்டாச்சாரியர்கள் வேதமந்திரங்கள் முழங்க கோவிலில் உள்ள கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு வெகு விமர்ச்சையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது,

இதனையடுத்து பட்டிவேலப்பருக்கு புனித நீரும் ஊற்றி ,தீபாராதனையும் காட்டப்பட்டது,

கும்பாபிஷேக நிகழ்வுக்கு வருகை புரிந்த ஏராளமான பக்தர்கள் மீது புனித நீர் தெளித்தும், அதனை தொடர்ந்து இறுதியாக அன்னதானமும் , சிறப்பு பிரசாதமாக பஞ்சாமிர்தம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.,

இதனை தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ பட்டிவேலப்பர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இந்நிகழ்வில் மேல்பள்ளம் , வடகவுஞ்சி, பி.எல்.செட் உள்ளிட்ட சுற்றுவட்டார பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்...



■ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் சம்பவம் எதிரொலியாக தமிழ்நாடு முழுவதும் காவல்துறையில் அதிகாரிகளுக்கு கீழே இயங்கும் அங்கீகரிக்கப்படாத தனிப்படைகளை கலைக்க டிஜிபி உத்தரவு பிறப்பித்துள்ளார். அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு பிரிவுகளை தவிர்த்து எந்தவிதமான தனிப்படைகளும் செயல்படக் கூடாது என்றார்.




# தாம்பரம் மாநகராட்சி அதிமுக கவுன்சிலர் சேலையூர் போலீசில் புகார்

சேலையூர், ஜூலை 03

செங்கல்பட்டு மாவட்டம் சேலையூர் அருகே உள்ள பதுவஞ்சேரி தலைமைச் செயலக குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் ராஜ் என்ற வாட்டர் ராஜ் (வயது 54) தாம்பரம் மாநகராட்சி 69 வது வார்டு அதிமுக கவுன்சிலர் ஆக உள்ளார். இவர் வசிக்கும் பகுதியில் தலைமைச் செயலக குடியிருப்புக்கு சொந்தமான இடத்தில் சாத்தையா என்பவர் ஆவின் பாலகம் அமைக்க தகர செட் போடும் பணியை செய்வதாக குடியிருப்பு சங்கத்தை சேர்ந்த சுந்தர் என்பவர் தன்னிடம் தெரிவித்ததாகவும் இது தொடர்பாக நேரில் சென்று விசாரித்த போது சாத்தையா தன்னை அவதூறாக பேசி தாக்கியதாகவும்

இதில் கையில் எலும்பு முறிந்தது போல சத்தம் கேட்டு கை வீங்கி உள்ளதாகவும் இதை தொடர்பாக குரோம்பேட்டை மருத்துவமனை சிகிச்சை பெற்று சேலையூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிப்பதாகவும் சாத்தையா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் புகாரில் கூறியிருந்தார்

இந்த புகார் தொடர்பாக சேலையூர் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அதிமுக கவுன்சிலர் தாக்கப்பட்ட சம்பவம் சேலையூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



# பாலமேட்டில் ஸ்ரீ.முத்தாலம்மன் கருப்புசாமி கும்பாபிஷே விழா

மதுரை ஜூன்.3-

மதுரை மாவட்டம் பாலமேடு பாறைக்கல் தெரு உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ பாறை கருப்பசாமி அருள்மிகு அன்னை ஸ்ரீ முத்தாலம்மன் , பால விநாயகர் , பாலமுருகன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது, நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் முதல் காலயாக வேள்வி பூஜைகளுடன் தொடங்கியது. மூன்று கால யாக வேள்வி பூஜையுடன் யாகசாலையில் வைத்து சிறப்பு பூஜை செய்யப்பட்ட புனித நீர் அடங்கிய திருக்குடங்கள் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு , சிவாச்சாரியார் தலைமையில் கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு திரு குடமுழக்கு திருவிழா நடைபெற்றது பின்னர் திருக்கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதான வழங்கப்பட்டது, தொடர்ந்து முத்தாலம்மனுக்கும் , பாறை கருப்புசாமிக்கும் சிறப்பு அலங்காரம், மற்றும் பரிவார தெய்வங்களுக்கும் மகா அபிஷேகம் நடைபெற்றது ஏற்பாடுகளை பாலமேடு பாறைக்கல் தெரு உறவின்முறையாளர்கள் மற்றும் திருப்பணி குழு நிர்வாகிகள். இளைஞர் சங்கத்தினர் விழா கமிட்டினர் செய்திருந்தனர்,



■ சென்னையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை உதவி அலுவலராக பணியாற்றிய எடிசன் சென்னையிலிருந்து பதவி உயர்வு பெற்று தென்காசி மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலராக நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார் மாவட்ட ஆட்சித் தலைவர் உதவி மக்கள் (செய்தி)தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் மற்றும் மாலை தந்தி குழுமம் வாழ்த்து தெரிவித்தனர்.



# பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக அவசர செயற்குழு கூட்டம்

பெருங்களத்தூர், ஜூலை.3

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக அவசர செயற்குழு கூட்டம் பகுதி கழக அவைத்தலைவர் டி.ஆர்.கோபி மாமன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மதுரை மாநகரில் நடைபெற்ற கழகப் பொது குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி ஓர் அணியில் தமிழ்நாடு என்னும் திட்டத்தினை கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திருமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்ததை தொடர்ந்து பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இல்லம்தோறும் உறுப்பினர் சேர்க்கும் பணிகள் குறித்தும் கழக வளர்ச்சி பணிகள் குறித்தும் மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் கலந்துகொண்டு மாநகரக் கழகத்திற்கு வலு சேர்க்கும் விதமாக பணிகள் அமைந்திட வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இதில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# 7வது கால்நோய், வாய்நோய் தடுப்பூசி பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா துவக்கி வைத்தார்

கன்னியாகுமரி, ஜூலை.3-

கன்னியாகுமரி மாவட்ட கால்நடை பாரமரிப்பு துறை சார்பில் வில்லுக்குறி பேரூராட்சிக்குட்பட்ட கருப்புக்கோடு பகுதியில் 7வது சுற்று கால்நோய் வாய்நோய் தடுப்பூசி பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, தெரிவிக்கையில்

கால்நோய், வாய்நோய் ஆனது பிளவுப்பட்ட குளம்புள்ள கால்நடை இனங்களான பசு மற்றும் எருமைகளுக்கு பரவும் நோயாகும். இந்நோய் தாக்கப்படும் கால்நடைகளுக்கு காய்ச்சல், பசியின்னை, அதிக அளவு உமிழ்நீர் சுரப்பு, கால், வாய் மற்றும் மடிக்காம்புகள் இவற்றில் கொப்பளங்கள் ஏற்படும். இது காற்றில் பரவும் நோய் ஆகும். இதனால் நோய் தாக்கப்பட்ட கால்நடைகளில் பால் உற்பத்தி குறைந்து பொருளாதார இழப்பு ஏற்படும். நோய் தாக்கப்பட்ட பசுக்களில் பால் அருந்தும் கன்றுகள் இறக்க நேரிடும். இந்த நோயிலிருந்து கால்நடைகளை காத்திட தடுப்பூசி போடுவது ஒன்றே சிறந்த வழியாகும்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை ஆறு சுற்று கால்நோய் வாய்நோய் தடுப்பூசி பணிகள் நடந்துள்ளது. தற்போது 7வது சுற்று கால்நோய் வாய்நோய் தடுப்பூசி பணி இன்று (02.07.2025) முதல் 31.07.2025 வரை நடைபெற உள்ளது. 7வது சுற்றில் சுமார் 58,700 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டிட இலக்கு நிர்ணயித்து கால்நடை பராமரிப்புத்துறை செயல் திட்டம் வகுத்துள்ளது. நமது மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையை சார்ந்த கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர்களை கொண்ட 52 குழுக்கள் அமைக்கப்பட்டு, இப்பணிகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கால்நோய் வாய்நோயினால் தங்களுக்கு ஏற்படும் உற்பத்தி இழப்பை தடுத்திட இவ்வாய்ப்பினை பயன்படுத்தி, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களிடம் உள்ள நான்கு மாத வயதிற்கு மேலான அனைத்து பசு மற்றும் எருமைகளுக்கு தடுப்பூசி போட்டு கொள்ள கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் கால்நடை பாராமரிப்புத்துறை மரு.முகம்மது கான், கால்நடை மருத்துவர்கள், செவிலியர்கள், துறை அலுவலர்கள், கால்நடை விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ”தமிழ்நாடு நாள் விழாவினை” முன்னிட்டு தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் பல்வேறு போட்டிகள்

சிவகங்கை, ஜூலை.3-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18 ஆம் நாளினையே “தமிழ்நாடு நாள் விழா” இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நாள் விழாவினை கொண்டாடும் வகையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு, மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் வருகின்ற 04.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி அரங்கத்தில் முற்பகல் 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேலும், மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/மும் என பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

கட்டுரை போட்டிகளுக்கான தலைப்புகளாக 1.ஆட்சிமொழி வரலாற்றில் கீ.இராமலிங்கம் மற்றும் 2.பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையாரின் தமிழ் ஆட்சிச்சொல் பணி ஆகியவை மற்றும் பேச்சுப்போட்டிகளுக்கான தலைப்புகளாக 1. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, 2. அன்னைத் தமிழே ஆட்சிமொழி, 3. தொன்றுதொட்டு தமிழ்நாடு எனும் பெயர், 4. அறிஞர் அண்ணா கண்ட தமிழ்நாடு, 5. ஆட்சிமொழி விளக்கம், 6. தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய நிகழ்வு, 7. ஆட்சிமொழி ஙீ சங்க காலம்தொட்டு, 8. இக்காலத்தில் ஆட்சிமொழி ஆகியவை போட்டிகளின் தலைப்புகளாக நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளுக்கான பங்கேற்புப்படிவம், போட்டிகள் குறித்த விரிவான விதிமுறைகள் ஆகியவை முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக அந்தந்த பள்ளிகளுக்கு சுற்றிக்கை வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாணாக்கர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொண்டு, மேற்கண்ட போட்டிகளில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# காட்பாடி திமுகவைச் சார்ந்த வன்னியராஜா புஷ்பலதா இல்லத் திருமண விழா!!

## துணை முதல்வர் உதயநிதி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழிலதிபர்கள், (அதிமுக) சேகர் ரெட்டி உட்பட பலர் பங்கேற்பு

வேலூர், ஜூலை.3-

வேலூர் மாவட்டம், காட்பாடி வடக்கு பகுதி திமுக செயலாளர் வன்னியராஜா புஷ்பலதா ஆகியோரின் மகள் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி மற்றும் அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் தாலி எடுத்துக் கொடுத்து சீர் திருத்த திருமணத்தை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தினர்.



திருமண நிகழ்வில் பேசிய துணைமுதல்வர், "பிறக்கப்போகும் குழந்தைக்கு தமிழில் பெயர் வைக்கும்படி மணமக்களிடம் கேட்டுகொண்ட அவர் காட்பாடியில் இருந்து தனது அரசியல் பயணத்தை தொடங்கியதாகவும் மணமேடையில் பெருமிதமாக பேசினார்.

இதனைத் தொடர்ந்து, வேலூருக்கு பெருமை சேர்த்த, காட்பாடியில் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக மற்றும் கலைஞரின் நெருங்கிய தோழரும், சட்டமன்றங்கள் முதல் பாராளுமன்றங்கள் வரை பாராட்டக்கூடிய மக்கள் நலனில் முழு அக்கறை கொண்ட மூத்த அரசியல் தலைவர் என பாரதப் பிரதமரே புகழாரம் சூட்டிய, தொடர்ச்சியாக சட்டமன்ற உறுப்பினர் என வாழ்த்து பெற்ற, தமிழகத்தில் மாபெரும் தலைவராக மக்கள் மனதில் இடம் பிடித்த அரசியல் தலைவர் என வாழ்த்து பெற்ற அன்பு உள்ளம் கொண்ட, காட்பாடி மண்ணின் மைந்தர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மணமக்களை வாழ்த்தி பேசியதாவது;" மணமக்களுக்கு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களே வாழ்த்து தெரிவித்திருக்கிறார் அதைவிட பெருமை வேறு ஒன்றும் இல்லை. அவருக்கு மேல் வாழ்த்து சொல்ல வேண்டுமென்றால் கவர்னர் தான் வாழ்த்து சொல்ல வேண்டும் ஆனால் கவர்னர் வாழ்த்த மாட்டார் என்றார்." இவ்வாறு பேசினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள், பல்வேறு கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், ஆஇஅதிமுக சேர்ந்த தொழிலதிபர் சேகர்ரெட்டி மற்றும் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு ஊழியர்கள், கட்சி நிர்வாகிகள், அனைத்து கட்சி முக்கிய தலைவர்கள் பொதுமக்கள் உட்பட சுமார் 10000க்கும் மேற்பட்டோர் வன்னியராஜா புஷ்பலதா இல்ல திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# தமிழ்நாட்டில் 8ம் தேதி வரை மழை பெய்யும்

சென்னை, ஜூலை.03-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் ஒருசில இடங்களில் நேற்று மழை பெய்துள்ள நிலையில், ஒரு சில இடங்களில் வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 3 டிகிரி செல்சியஸ் வரையில் அதிகரித்து காணப்பட்டது. பெரும்பாலான இடங்களில் இயல்பை ஒட்டியும் இருந்தது. அதன் தொடர்ச்சியாக கரூர், தூத்துக்குடி மாவட்டங்களில் இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் முதல் 5 டிகிரி செல்சியஸ் வரையிலும், நீலகிரி, ஈரோடு, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர் மாவட்டங்களில் 3 டிகிரி செல்சியஸ் வரையும் அதிகரித்து காணப்பட்டது.

இதையடுத்து, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் 7ம் தேதி வரையில் தமிழத்தில் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. இன்று ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 3 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பநிலை அதிகரித்து காணப்படும். இதன் காரணமாக அசவுகரியம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. சென்னையில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் லேசான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி முதல் 102 டிகிரி வரை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தென்தமிழகக் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதை ஒட்டிய குமரிக் கடல் பகுதிகளில் இன்றும், நாளையும் சூறாவளிக்காற்று மணிக்கு 65 கிமீ வேகத்தில் வீசும்.

# அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்த குறிப்பிட்டுள்ள இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தகவல்

சிவகங்கை, ஜூலை.3-

2025-2026 ஆம் ஆண்டிற்கான சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால், அறிவிப்பு எண்.5ல் “20.10.2016க்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில், மேற்கண்ட தேதிக்கு முன் பதிவு செய்யப்பட்ட தனிமனைகளுக்கு எந்த காலக்கெடுவும் இல்லாமல் மனு பெறப்பட்டு வரன்முறை செய்து கொடுக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, தனிமனையாக வாங்கிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில், தற்சமயம் முதல் onlineppa.tn.gov.in என்ற இணைய முகவரியின் வாயிலாக விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்குட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல், வருகின்ற 30.06.2026 வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்து கடந்த 15.05.2025 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்.70 ல் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தற்சமயம் முதல் www.tcponline.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

இதேபோன்று, மலையிடப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படா மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்களை www.tnhillarealayoutreg.in என்ற இணையதளத்திற்கு பதிலாக, www.tcponline.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக வருகின்ற 30.11.2025 ஆம் தேதிக்குள் பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் மொத்தம் 2,07,600 மாட்டினங்களுக்கு 55 கால்நடை மருத்துவக்குழுக்கள் மூலம் தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன

## கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் 7 வது சுற்று தடுப்பூசி பணியினை காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, துவக்கி வைத்து, தகவல்

சிவகங்கை ஜூலை.3-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பருத்திக்கண்மாய் கிராமத்தில், தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டத்தின் கீழ் 7வது சுற்று தடுப்பூசிப் பணியினை,மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, துவக்கி வைத்து தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான தமிழக அரசு கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில், கால்நடைகளின் நலன் காத்திடும் பொருட்டு, அதற்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மேலும், அரசின் தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் (ழிகிஞிசிறி) சார்பில், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலமாக 7வது சுற்று கால் மற்றும் வாய் காணை நோய் (கோமாரி) தடுப்பூசி போடும் பணி, தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து மாட்டினங்களுக்கும் இலவசமாக நேற்று (02.07.2025) முதல் வருகின்ற 31.07.2025 ஆம் தேதி வரை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் துறை ரீதியாக வருகை புரிந்து, தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது.

நேற்று (02.07.2025) காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருத்திக்கண்மாய் கிராமத்தில் 300 மாட்டினங்கள் பயன்பெறும் வகையில், தடுப்பூசி செலுத்தும் பணியானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், சிவகங்கை மாவட்டத்திலுள்ள மொத்தம் 2,07,600 மாட்டினங்கள் பயன்பெறவுள்ளன. இதற்கான தடுப்பூசிகள் மாவட்டத்திலுள்ள






12 ஊராட்சி ஒன்றிய தலைமை கால்நடை மருந்தகங்களிலுள்ள பாதுகாப்பான முறையில் அதற்கான தகுந்த உபகரணங்களில் குளிரூட்டப்பட்ட நிலையில் (ICE LINED REFRIGIRATOR) தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கென நியமிக்கப்பட்டுள்ள 55 குழுவினர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்திற்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தினந்தோறும் ஒரு குழுவானது 150 கால்நடைகள் வீதம் தடுப்பூசி போட பணிக்கப்பட்டுள்ளது. இதில், நான்கு மாத கன்றுகள் முதல் அனைத்து வயதுடைய மாட்டினங்களுக்கும் தடுப்பூசிகள் போடப்படவுள்ளது.

இத்தடுப்பூசியினை கால்நடைகளுக்கு செலுத்துவதனால், இதன் வாயிலாக தங்களது கால்நடைகளை, கால் மற்றும் வாய்க்காணை (கோமாரி) நோயின் தாக்கலிருந்து பாதுகாத்திட முடியும். இதனால் கறவைமாடுகள் பால் உற்பத்தி, எருதுகளின் வேலைத்திறன், கறவைமாடுகளின் சினை பிடிப்பு போன்றவைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்படும். இதனை கால்நடை வளர்ப்போர் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாமினை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு, அனைத்து மாட்டினங்களுக்கும் இலவசமாக கோமாரி தடுப்பூசியினை செலுத்தி, உங்கள் கால்நடை செல்வங்களை கோமாரி நோயிலிருந்து பேணி பாதுகாத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இம்முகாமில், கால்நடை வளர்ப்போர்களான 4 பயனாளிகளுக்கு தலா ரூ.29,000/ மதிப்பீட்டில் மானிய விலையிலான புல் நறுக்கும் இயந்திரங்களை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் (கூ.பொ) (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.வெ. கிரிஜா, உதவி இயக்குநர்கள் மரு.தி.ஞானசுப்பிரமணியன் (கால்நடை நோய்புலனாய்வுப்பிரிவு),மரு.இரா.ஜெயப்பிரகாஷ் (கால்நடை பராமரிப்புத்துறை), கால்நடை மருத்துவர் மரு.ஜே. ஜான்சுரேஸ்தாசன், கால்நடை உதவி மருத்துவர் மரு.சிலம்பரசன் உள்ளிட்ட கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161